**பலங்கொட பிரதேச சபை - 2020**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

பலங்கொட பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் பலங்கொட பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின. கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் இவ்வறிக்கையில் 1.6.1 (உ) பந்தியில் குறிப்பிடப்படும் அவதானிப்பு தவிர்ந்த கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு மற்றும் கடந்த ஆண்டில் சபையின் சொத்துக்களை மேன்படுத்தலிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 801,895 மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆண்டு கணக்கு தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | நடைமுறையல்லாத சொத்துக்களை மேன்படுத்த மேற்கொண்ட செலவுகள் மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 பண்டக கணிப்பீட்டினால் பராதீனம் செய்ய பரிந்துரைத்த ரூபா 420,188 பெறுமதியான சொத்துக்களை பராதீனம் செய்ய முன்னர் குறித்த சொத்துக் கணக்குகளிலிருந்து அகற்றியுள்ளதால் நடைமுறையல்லாத சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபடுத்தலிற்கு வருமானத்திலிருந்து பங்களிக்கும் கணக்கின் மீதி அப் பெறுமானத்தால் குறைத்து காட்டப்பட்டன. | 2021 ஆண்டு நிதிக்கூற்று தயாரிக்கும் போது பண்டக கணிப்பீட்டினால் அகற்ற மற்றும் ஏலவிற்பனை செய்ய பரிந்துரைத்த சொத்துக்களை பராதீனம் செய்ய முன்னர் குறித்த கணக்குகளிலிருந்து அகற்றாதிருக்க நடவடிக்கை எடுப்பதாக. | குறித்த சொத்துக்களை பராதீனம் செய்த பின்னர் கணக்குகளிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஆண்டினுள் கொள்வனவு செய்த ரூபா 497,200 பெறுமதியான குழாய் இருப்பை நடைமுறையல்லாத சொத்தாக மூலதனமாக்கியிருந்ததால் மீளாய்வாண்டில் நடைமுறையல்லாத சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபடுத்தல் கணக்கின் மீதி சமமான பெறுமதியால் கூட்டிக் காட்டப்பட்டிருந்தன. | 2021 ஆண்டு கணக்கு தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | நடைமுறை மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய நிலையான அறிவித்தல் பலகை கட்டணம் ரூபா 28,800 கணக்கீடு செய்யப்படாததால் ஆண்டின் மீண்டுவரும் வருமானம் மற்றும் வருமன கடன்படுனர் அப் பெறுமானத்தால் குறைத்துக் காட்டப்பட்டன. | இக்கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதாக. | ஆண்டிற்குரிய வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (உ) | கடந்த ஆண்டு ரூபா 16,830 ஆன பண்டக ஆரம்ப இருப்பை கணக்கீடு செய்யாததால் அவ்வாண்டின் மிகை அப்பெறுமானத்தால் கூட்டிக் காட்டப்பட்டிருந்தமை மீளாய்வாண்டில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இவ்வாறான குறைகள் ஏற்படாதவாறு பொறுப்பேற்பதாக. | ஆண்டின் வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 10,102,592 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 5,836,324 ஆகும். கடந்த ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் மூலதன சொத்து திருத்தம் மற்றும் பராமரிப்பு செலவு ரூபா 1,960,723 குறைத்துள்ளமை நிதிவிளைவின் வளர்சிக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| அனுமதிப் பத்திர கட்டணம் | | |
| 1988 இலக்கம் 56 மற்றும் 2000 இலக்கம் 53 கொண்ட சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இலக்கம் 47 கொண்ட தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணம் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற வேண்டுமென இனங்கண்டிருந்த 17 நிறுவனங்களிற்கு அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளுமாறு எழுத்து மூலம் | கைத்தொழில் உரிமையாளர்களுக்கு நினைவூட்டல் அனுப்பியுள்ளதுடன் இவ் வியாபாரங்களினால் ஏற்படும் சுற்றாடல் தாக்கம் தொடர்பாக கண்டறிய தேவையான நடவடிக்கை எடுக்க செயற்படுவதாக. | தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்கள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

அறிவித்திருந்த போதும், 2020 திசெம்பர் அளவிலும் அனுமதிப் பத்திரங்களை பெற்றிருக்கவில்லை. அதன் காரணமாக சபைக்கு ரூபா 68,000 ஆன வருமானம் இழக்கப்பட்டுள்ளதுடன், அவ்வியாபாரங்களினூடாக இடம் பெறும் சுற்றாடல் தாக்கம் தொடர்பாக காலரீதியான மதிப்பீடொன்றும் இடம்பெற்றிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 செயற்பாட்டு செயற்திறமையின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| பலங்கொட பிரதேச சபை மற்றும் பலங்கொட நகர சபை எல்லையிலுள்ள 119 குடும்பங்களின் எல்லை நிர்ணயம் செய்யப்படாததால் அக் குடும்பங்கள் பிரதேச சபை அதிகார எல்லையிற்கு உட்பட்டவர்களா என 2021 மார்ச் வரை இனங்காண தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக. | எல்லை நிர்ணயம் மேற்கொள்ள தேவையான முயற்சிகளை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| சபை அதிகார எல்லையில் ஆண்டுதோரும் ஒன்று திரலும் திண்ம கழிவுப் பொருட்கள் 48 டொன் அளவான போதும் உக்கலடையும் கழிவுகளை வெளியிட பொருத்தமான காணியொன்றை இனங்கண்டிருக்காத காரணத்தால் அதிகார எல்லையில் உக்கலடையும் கழிவுகள் ஒன்று திரட்டும் சேவையை வழங்க சபைக்கு இயலாதிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டு இறுதியளவிலும் தேசிய கொள்கைகளுக்கு இணங்க கழிவுப் பொருள் முகாமைத்துவ திட்டமொன்றை தயாரித்திருக்கவில்லை. | காணியொன்று கிடைத்தவுடன் சேதன பசளை உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுப்பதுடன், ஒவ்வொறு வியாழக் கிழமைகளிலும் அதிகார எல்லையில் உக்கலடையாத கழிவுகளை ஒன்று திரட்டி அவற்றை வகை படுத்தி விற்பனை செய்யப்படுவதாக. | முறையான கழிவு முகாமைத்துவ வேலைத் திட்டமொன்றை திட்டமிட்டு செயற்படுத்த வேண்டும். |